சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4பங்குனி 2052
16th - 17th March 2021
ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# *Journal of* Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*
Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

**19** பகுதி-5
Part -5

மற்றொன்று:

## செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

## Classical Thamizh

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

# பண்டையத் தமிழர்களின் நம்பிக்கைகள்

சா. மஞ்சுளா

உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை:-

நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு, சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. ஒரு சமுதாயத்திடம் காணப்படும் நம்பிக்கைகளைக் கொண்டு அச்சமுதாயத்தினைப் பற்றி அறிய முடிகின்றது.

பழங்குடி நிலையிலிருந்து மனிதன் நாகரீகம் அடைந்தாலும் பழங்குடி மனநிலை அவனை விட்டுப் போகவில்லை. பண்டைய காலம் முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது.

## தமிழரின் நம்பிக்கைகள்:

மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நம்பிக்கைகள் மிகப்பல. இந்த நம்பிக்கைகளே தனிமனித வாழ்வையும் ஒரு சமுதாய வாழ்வையும் நடத்திச் செல்கிறது.

## நம்பிக்கை சொற்பொருள் விளக்கம்:

நம்பிக்கை வாழ்க்கையில் முதன்மை பெறுகின்றது. அதனுடைய சொல்லாட்சியைப் பற்றி அறியவேண்டியது அவசியம். நம்பிக்கை என்பதற்கு விசுவாசம், உண்மை, சத்தியம், நிசம், உறுதிப்பாடு என்று பல்வேறு பொருள்களைத் தருகிறது.

தொல்காப்பியத்தில் "நம்பும் மேவும் நசையாகும்மே" என்று வருகின்றது. நம்பு என்ற சொல்லிற்கு 'நசை' அல்லது 'விருப்பம்' என்னும் பொருளைத் தருகின்றது.

நற்றிணையில் 'நம்பிக்கை' என்னும் சொல் பயின்று வந்துள்ளது.

"சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்
சுருவாள் போல நோக்கும்"

இவற்றில் நம்பு என்ற சொல், தொடக்கத்தில் 'விருப்பம்' என்ற பொருளிலும் பின்னர் 'நம்பிக்கை' என்ற பொருளிலும் வந்துள்ளது. ஆனால் தற்போது நம்பிக்கை என்ற பொருளே வழக்கில் உள்ளது.

## நம்பிக்கையின் தோற்றம்:

நம்பிக்கைகள் எப்பொழுது தோன்றின என்று திட்டவட்டமாகக் கூற இயலாது எனினும் மனிதன் இயற்கையின் தாக்கத்திற்கு மிகுதியாக ஆட்பட்டிருந்த அறிவு வளர்ச்சியின் தொடக்க நிலையிலே நம்பிக்கைகள் தோன்றின எனலாம்.

## சங்க இலக்கியச் சடங்குகளும் நம்பிக்கைகளும்:

பொதுவாக மனிதன், பிறந்தது முதல் இறப்பது வரையிலும் பல்வேறு வகையான சடங்குகளைப் பின்பற்றுகிறான். அச்சடங்குகளைச் சமய நம்பிக்கை சார்ந்த சடங்குகள், வாழ்வியல் பழக்க வழக்கங்கள் சார்ந்த சடங்குகள் என இருவகையாகப் பிரிக்கலாம் சங்க இலக்கிய நூல்களில் இருந்து சில சடங்குகளையும், நம்பிக்கைகளையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## இயற்கை வழிபாடு:

இயற்கையின் சீற்றங்களுக்குப் பயந்த மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எண்ணி அவ்வியற்கையை வழிபடத் தொடங்கினான். சூரிய

வழிபாடு, பிறைவழிபாடு போன்றவை இயற்கை வழிபாடு சார்ந்ததே. பிறைவழிபாடு குறித்த குறிப்பு குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

**"செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி இன்னாப் பிறந்தன்று, பிறையோர் அன்னோ",**

இப்பாடலில் பிறைத்திங்களுக்கு வண்ணத்தாலும் வடிவாலும் ஒத்ததாக உள்ள உடைந்த சங்குவளை உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய பிறைநிலா மாலையில் செவ்வானத்தில் தோன்றும் அப்பொழுது பலராலும் தொழப்பெறும் பெருமையுடையது. இதன் மூலம் பிறை நிலவை வழிபடும் நம்பிக்கை பழங்காலத்திலேயே தமிழர்களிடையே இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**இறப்புச் சடங்கு:**

உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் உயிர் துறப்பது இயற்கை. சங்க இலக்கியங்களுள் மிகச் சிறந்த வரலாற்று ஆவணமாகப் போற்றப்படுவது புறநானூறு ஆகும். அதில் சிறுகுழந்தைகள் மரணம் அடைந்தால் உடலை வாளால் பிளந்து அடக்கம் செய்தல், வீரர்களின் மரணத்தைப் போற்றும் வகையில் நடுகல் அமைத்தல் போன்ற பல மரணச் சடங்குகள் குறித்த தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும் ஆள் அன்று என்று வாளின் தப்பார்"[2]**

இதன் மூலம் சிறு குழந்தை இறந்தாலும் சரி, குழந்தை இறந்து பிறந்தாலும் சரி இறுதிச் சடங்கின்போது அவற்றிற்கு வடு ஏற்படுத்திப் புதைக்கும் முறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நம் தமிழ்ச் சமூகத்தில் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**வழிபாடு தொடர்பான சடங்குகள்:**

உலகம் முழுவதும் உள்ள இலக்கியங்களில் புராணக்கதைகள், கடவுள் வழிபாடு போன்ற பதிவுகள் இடம் பெற்றுள்ளன. மிகப்பழமையான சங்க இலக்கியங்களிலும் இறைவழிபாடு குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன.

பத்துப்பாட்டில் முதலில் வைத்து எண்ணக் கூடியதாக, திருமுருகாற்றுப்படை உள்ளது. நலம் வேண்டுபவர்களை முருகக் கடவுளிடம் ஆற்றுப்படுத்துவதாக நக்கீரரால் படைக்கப்பட்ட நூலே திருமுருகாற்றுப்படை.

**"நறுஞ்சாந்து அணிந்த கேழ்கினர் மார்பின் கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்[3]**

என்ற பாடலில் பல்வகை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையணிந்த முருகப்பெருமாளை சந்தனம் பூசிய மார்பினை உடைய குறவர்கள் 'தொண்டகம்' எனப்பெறும் சிறுபறையை அடித்து குரவை கூத்து ஆடினர்.

சங்க இலக்கியங்களுள் ஒன்றான நெடுநல்வாடையிலும் இறைவழிபாடு பற்றி குறிப்பு உள்ளது. மாலைக் காலத்தில் பெண்கள் தெய்வத்தை வணங்குவது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

**"மடவரல் மகளிர் பிடகைப் பெய்த செவ்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து அவ்விதழ் அவிழ் பதம் கமழ பொழுது அறிந்து[4]**

நெடுநல்வாடையில் குளிர்கால வர்ணனை இடம்பெறும் பகுதியில், பகலிலும் மழைமேகம் சூழ்ந்து இருளாகக் காட்சித் தருவதால் மாலைக் காலத்தை அறிய முடியாமல் மக்கள் தவிக்கின்றனர். அப்பொழுது மகளிர் பசுமையான காம்புகளைக் கொண்ட செம்முல்லை அரும்புகளை அழகிய பூந்தட்டுகளில் இட்டு, மாலைப்பொழுதில் இறைவனை வழிபடுகின்றனர்.

**நாளும் கோளும்**

பழந்தமிழர் தங்களது வாழ்வில் ஏதேனும் ஒரு முக்கிய செயலை தொடங்கும் முன் நல்லநாள் பார்த்தும், நல்லவேளை பார்த்தும்

தொடங்குகின்றனர். இன்றைக்கும் வீட்டில் ஏதேனும் ஒரு முக்கிய நிகழ்வு நடைபெற நாள், கிழமை பார்ப்பதுண்டு. இவ்வழக்கமானது இடையில் புதுத்தப்பட்டதன்று பொதுவாய் ஒரு பழக்கம் என்பது உடனடியாக புகுத்தக்கூடியது அல்ல. அவை பல்வேறு மாறுதல் அடைந்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதாகும். அவ்வகையில் பழந்தமிழர்கள் நாளும், கிழமையும் பார்த்து தங்களது செயலினை ஆற்றியுள்ளனர்.

சங்ககால நூலில் போர் தொடங்குவதற்கு முன் நல்லநாள் பார்த்தனர் என்றும் அதற்கென அரண்மனை கணியர் என அழைக்கப்படும் நாளை கணித்து சொல்பவர்கள் இருந்துள்ளனர். புலவர்களும் மன்னவர்களை பாடி பசில்பெற வேண்டி நாளையும், கோளையும் பார்த்துச் சென்றனர் என்று புறநானூறு மூலம் அறியலாம்.

> "நாளன்றும் போக்கிப் புள்ளிடைத் தட்பப்
> பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்"[6]
> (புறம் 124)

**பல்லி சகுனம் பார்த்தது:**

பல்லியின் சத்தத்தைக் கேட்டு சகுனம் பார்த்தல் இன்றும் நம்மிடையே தொடர்ந்து வருவதை நாம் அறியலாம். தற்காலத்தில் அவற்றிற்கென பஞ்சாங்க நூல்கள் கூட விற்கின்றனர். அவற்றில் மேனியில் பல்லி விழுகின்ற இடத்தினைப் பொறுத்து பஞ்சாங்கம் குறிக்கப்பட்டிருக்கின்றன.

சங்ககால நூல்களிலும் இவைகள் பற்றின நம்பிக்கைகளை மக்கள் கொண்டிருந்தனர் எனப் பலச்சான்றுகள் நமக்கு கிடைத்துள்ளன.

> "மையல் கொண்ட மதன்ழி இருக்கையன்
> பகுவாய் பல்லி படுதொறும் பரவி
> நல்ல கூறுகென நடுங்கி"[7] (அகம் 289)

இப்பாடலில் தலைவனை பிரிந்த தலைவி தன் அன்புக் காதலன் வரும் நாளை எதிர்நோக்கியிருக்கும் வேளையில் பல்லியானது நிலைக்கதவுகளிலும் சுவர்களின் மீதும் இருப்பதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவள் பல்லியை நோக்கி நல்ல பலன் கூறுதல் வேண்டும் என தன் மனதில் எண்ணிக் கொள்கின்ற விதமாக அமைந்துள்ளது. இதிலிருந்தே அக்கால மக்களின் நம்பிக்கைகளின் ஒன்றில் முக்கியமானதாக இவை இருந்துள்ளது என அறிய முடிகிறது.

**நம்பிக்கைகளின் வகைகள்:**

தமிழர்களாகிய நம்மிடையே எண்ணற்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன. அவற்றில் சிலவற்றை காண்போம்.

**1. குழந்தை பற்றிய நம்பிக்கைகள்:**

- பிள்ளை வரம் வேண்டி அரசமர வழிபாடு செய்தனர்.
- "கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாது" என்று கூறுவர். கண்ணேறு பட்டதைக் கழிப்பதற்காகச் சுண்ணாம்பும் மஞ்சளும் கொண்டு சுற்றி வீதியில் எறிவார்கள். இவ்வாறு செய்தால் கண்ணேறு கழிந்து விடுமென நம்பினர்.
- குழந்தைக்குச் சிறு காயம் ஏற்படாவிட்டால் எமன் அக்குழந்தையைத் தூக்கிச் சென்று விடுவான் என்ற நம்பிக்கையில் காது குத்தும் வழக்கம் நம் தமிழ்நாட்டில் தோன்றியது.

**2. திருமணம் பற்றிய நம்பிக்கைகள்:**

- இரண்டு திருமணங்கள் ஒரே வீட்டில் ஒரே நேரத்தில் நடந்தால் ஒரு குடும்பம் சிறக்கும் மற்றொரு குடும்பம் தாழ்நிலை அடையும் என்று நம்பினர்.
- திருமணம் பற்றிய கனவு நல்லதன்று
- மணமான பெண் மாப்பிள்ளை வீட்டில் நுழையும் போது, வலது காலை எடுத்து வைத்து நடக்க வேண்டும்.
- ஆடி மாதத்தில் பெண் பார்த்தல் நல்லதல்ல.
- திருமணச் சடங்குகளையும் நல்ல நாள் பார்த்தே நடத்தினர் என்பது, அகநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **கர்ப்பிணிப் பெண்கள் பற்றிய நம்பிக்கைகள்:**

- கர்ப்பமாக உள்ளவர்கள் தலைவாசலில் தலைவைத்துப்படுக்கக்கூடாது.
- கர்ப்பிணிப் பெண்கள் வலது கையை ஊற்றினால் ஆண் குழந்தையும், இடது கையை ஊன்றினால் பெண் குழந்தையும் பிறக்கும் என நம்புகின்றனர்.

4. **மழை பற்றிய நம்பிக்கைகள்:**

- வடக்கே, தெற்கே மின்னல் தோன்றினால் மழை வரும் என நம்புகின்றனர்.
- நிலவைச் சுற்றிப் பெரிய வட்டமாக இருந்தால் மழை பெய்யும் என்றும் சிறியதாக இருந்தால் சில நாட்கள் ஆகும் என்று நம்பினர்.
- தட்டான் தாழப் பறந்தால் மழை வரும்.
- தவளை கத்தினால் மழை வரும்

5. **விருந்தினர் பற்றிய நம்பிக்கைகள்:**

- காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்று நம்பினர்.
- முதன்முறையாக வீட்டிற்கு வரும் விருந்தினர்க்கு அசைவ உணவு படைக்கக்கூடாது. உறவு முறிந்துவிடும்.
- விருந்தினர்க்குச் சேவல்கறி படைக்கக் கூடாது.
- விருந்தினர்கள் சென்றதும் வீட்டைப் பெருக்கக்கூடாது. அவ்வாறு செய்யின் தொடர்பு அறுந்துவிடும்.

6. **நட்சத்திர நம்பிக்கைகள்:**

- பரணியில் பிறந்தவன் தரணி ஆள்வான்.
- கேட்டை கோட்டை கட்டி ஆள்வான்.
- மகம் ஜெகத்தை ஆள்வான்
- அவிட்டம் தந்தைக்கு ஆகாது.

7. **கடவுள் பற்றிய நம்பிக்கைகள்:**

- இறைவனுக்கு அபிஷேகம் செய்தால் துன்பம் தீரும்.
- நாட்டில் மழைபெய்து நாடு செழிக்க மாரியின் அருள் வேண்டுமென நம்பினர்.
- அம்மை முதலிய நோய்களுக்கு மாரிதான் காரணம் என்று நம்பினர்
- கோயிலில் பூக்கட்டிப் போட்டுச் சிறு குழந்தைகளை எடுக்கச்சொல்லி நல்லதா, கெட்டதா என்று பார்த்து நல்ல நிகழ்வுகளை நடத்தினர்.

8. **நோய்கள் பற்றிய நம்பிக்கைகள்:**

- நாட்டுப்புற மருத்துவம் பல நாட்டுப்புற நம்பிக்கைகளுக்குத் தாய் ஆகும்.
- அம்மை நோய் தெய்வக்குறை என நம்பி மாரிக்கு வழிபாடு செய்து, வேப்பிலையைப் பயன்படுத்துகின்றனர்.
- நேர்த்திக்கடன் நல்ல மருந்து என்றும் நம்பினர்.
- ஆயிரம் மூலிகையைக் கொண்றாலும் அரை வைத்தியன்தான் ஆக முடியும் என நம்புகின்றனர்.

தன்னை ஒருவர் நினைத்தால் தும்மல் வரும் என்ற நம்பிக்கையைச் சங்க இலக்கியங்களில் காணலாம். குழந்தை தும்பினால் தாய் "நூறு" எனக் கூறுவது "நூறாண்டு வாழ்க" என்று பொருள்படும். மனிதர்கள் தும்பினால் ஆயுசு நாட்கள் கூடும் என்பது போல் ஆயுசு குறையும் என்ற நிலைக்கு வந்துள்ளோம். கொரோனா என்ற கொடுங்காலனால்.

9. **பயணம் பற்றிய நம்பிக்கைகள்:**

- பயணத்திற்குப் புறப்படும் போது "போய் வருகிறேன்" எனக் கூற வேண்டும்.
- பயணம் மேற்கொள்ளும் போது "எங்கே போகிறாய்?" எனக் கேட்கக்கூடாது.

**முடிவுரை:**

பழங்காலம் முதல் இன்றுவரை மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளையும், பின்பற்றி வருகின்ற சடங்குகளையும் இலக்கியங்கள்

வாயிலாகவே அறிந்து கொள்ள முடிகின்றது. இவற்றின் மூலம் மக்கள் தங்களுடைய நம்பிக்கைகள், பழக்கவக்கங்கள் சார்ந்தே தத்தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளனர் என்பதையும் உணரலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. குறுந்தொகை, பா. எண்-229
2. புறநானூறு, பா. எண்-74
3. திருமுருகாற்றுப்படை, பகுதி-1, ப. எண்-13
4. நெடுநல்வாடை, பா. எண். 39-44
5. கலித்தொகை, பா. எண்-11
6. நாட்டுப்புற இயல் ஆய்வு, (டாக்டர் சு. சக்திவேல்), நாட்டுப்புறவியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
7. புறநானூறு மூலமும் உரையும், பா. எண்-124, புலியூர்க்கேசிகன்
8. அகநானூறு மூலமும் உரையும், பா. எண்-289, புலியூர்க்கேசிகன்